காட்சியளிக்கின்றன. இருப்பினும், மாமன்ற உறுப்பினர் கோரிய விடுதியை துறை அலுவலர்களைக்கொண்டு ஆய்வு செய்து, இவ்வாண்டில் அந்த விடுதியைப் பழுது நீக்கம் செய்யமுடியுமெனில் பழுது நீக்குவதற்கும், பழுது நீக்கம் செய்யமுடியாத அளவிற்கு முழுவதுமாக பாதிப்படைந்திருந்தால், நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று புதிய விடுதி கட்டித் தருவதற்கும் ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 450, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

450—

பேருந்து வசதி

***7693—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியிலுள்ள மலைப் பகுதியில் வாழும் மக்களுக்குக் கூடுதலாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, மலைவாழ் மக்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, வாணியம்பாடியிலிருந்து ஜமுனாமரத்தூர் வழியாக பட்டரைக்காடு வரை சென்று வந்த 4 நடைகளில் 2-7-2011 முதல் 2 நடைகள் போளூருக்கு நீட்டித்து இயக்கப்பட்டு வருகின்றன. வாணியம்பாடியிலிருந்து காவலூர் மலைப் பகுதிக்கு 6 நடைகள் இயக்கப்பட்டு வந்தன. வாணியம்பாடியிலிருந்து காவலூர் மலைப் பகுதி மக்களினுடைய நலன் கருதி, கூடுதலாக 4 நடைகள் 17-9-2011 முதல் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், வாணியம்பாடி தொகுதியில் புதிய

2013 மே 9]

வழித்தடங்கள்மூலம் 24 நடைகள் புதிதாகவும், அதேபோல வழித்தட நீட்டிப்புகள்மூலம் 16 நடைகளும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும், பேச்சாலும், நடையாலும், கலையாலும், பேசும் மொழியாலும், வீரத்தாலும், இமயத்தின் கம்பீரத்தாலும், ஓங்கி உயர்ந்திட்ட எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தமிழகமே! (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய நாடாளுமன்றத்தை ஆள வந்த பேராளும் பெருந்தகையே! பன்மொழிப் புலவரே! முத்தமிழ் வித்தகரே! இந்தியத் திருநாட்டின் தனி மனித இராணுவமே! தங்களின் பொற்பாதம் தொட்டு பணிந்து வணங்குகிறேன்.*

முற்பகல் 10-45

வாணியம்பாடி தொகுதி முற்றிலும் மலை மற்றும் மலை சார்ந்த பகுதியை உள்ளடக்கிய தொகுதியாகும். மேற்கண்ட தொகுதியில் பீமக்குளம், நாயக்கனூர், பெரியகுரும்பத் தெரு, விஜிலாபுரம், நரசிங்கபுரம், பெலஜிகமானிபண்டா, நாராயணபுரம், மல்லங்கொண்டா, புதூர்நாடு, புங்கன்பட்டு நாடு, நெல்லிவாசல் நாடு போன்ற பகுதிகளில் 50,000/-க்கும் மேற்பட்ட, முற்றிலும் மலை வாழ் மக்கள் வாழ்கின்ற ஊராட்சிகளாக உள்ளன. அந்தப் பகுதியில் இருக்கின்ற பள்ளி மாணவர்கள், பள்ளிக்குக் காலையில் வந்து மாலையில் வீடு திரும்புவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். அந்தப் பகுதியில் இருக்கின்ற பள்ளி மாணவர்கள் 8 ஆம் வகுப்புக்கு மேல் படிப்பதற்கு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்ற சூழ்நிலையில் உள்ளனர். ஆகவே, மலைவாழ் மக்களின் நலன் கருதி, மேற்கண்ட பகுதிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும், அதிலும் குறிப்பாக மலைவாழ் பகுதி மக்கள் சீரான பேருந்து வசதிகள் பெற வேண்டுமென்ற இலட்சிய நோக்கத்தோடு பல்வேறு வழித்தடங்களை மக்களுக்கு வழங்கியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்கள் துறையின்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, மாணவச் செல்வங்களுக்கான புதிய பேருந்துகளை கூடுதலாக இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற பாதை வாணியம்பாடியிலிருந்து ஆலங்காயம், ஜமுனாமரத்தூர், போளூர் வழியாகச் செல்லுகின்ற சாலையாக உள்ளது. காவலூரிலிருந்து, சிங்காரப்பேட்டை வரையில் செல்லுகின்ற சாலை கடந்த 2001-2006 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே மலைவாழ் மக்களின் நலனைக் கருதி மிகச் சிறப்பான சாலையாக அமைக்கப்பட்டது. அந்தச் சாலை வழியாக ஏறக்குறைய 36 கிராமத்தினர் சென்று வருகின்றார்கள். அந்தப் பகுதியில் உள்ள மாணவ, மாணவியர்கள், பொது மக்கள், விவசாயப் பெருமக்கள், நகர்ப்புறங்களுக்குச் சென்று வருவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. தற்போது காலை, மதியம் 1-00 மணிக்கு சி-250 புறநகர்ப் பேருந்தும், மாலை 6-00 மணிக்கு ஒரு நடையுமாக அந்தப் பகுதியில் வந்து செல்கின்ற பேருந்தை நகரப் பேருந்தாக மாற்றி மலைவாழ் பகுதி மக்களின் நலன் கருதி, பேருந்துகள் வந்து செல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக கேட்டு அமருகிறேன்.

2013 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்த மலைவாழ் மக்களுடைய நலன் கருதியும், மாணவர்களுடைய நலன் கருதியும், அந்த வழித்தடங்களில் கூடுதலாக பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 451, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

451—

மாணவர் விடுதி

***7666—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கமுதி ஒன்றியம், இராமசாமிபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவ, மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் தொகுதி, கமுதி ஒன்றியம், இராமசாமிபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர்களின் விடுதி துவக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.